நில அபிவிருத்திக்காக ஒரு விவசாயிக்கு ஒரேயொரு தடவை கொடுக்கப்பட்டு, 20 வருஷங்களில், 7, 8 வருஷங்களில் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மட்டத்திலும் ஒரு வங்கி திறப்பதனால் லாபகரமாக நடப்பதற்கும், தொடர்ந்து வேலை இருப்பதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விடுமே, எனவே வட்டத்திற்கு ஒரு வங்கியிருந்தால் போதும் என்ற நிலையைச் சொல்கிறார்களே, அதை அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கோவில்பட்டியைப் பொறுத்த வரையிலும் வட்டத்திற்கு ஒரு வங்கி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் டைரக்டராக இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் ஒட்டப் பிடாரத்தில் அவர்கள் கேட்பது தனி கிளை வங்கி. ஒரு வங்கிக்கு கிளைகள் இருக்கும். சென்ட்ரல் பேங்குக்கு 30 கிளைகள் கூட இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒட்டப்பிடாரமா, ஓட்டப் பிடாரமா?

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகளில் சமீபத்தில் சுமார் 6 மாத காலமாகக் கடன் விண்ணப்பங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒட்டப்பிடாரம் பற்றிய கேள்வி வினாக்கள் 307, 308, 309 ஆகியவை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகின்றன.

சத்தியமங்கலம் காடுகளிலிருந்து சந்தன மரங்கள்

* 310 வினா **திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திம்பம். சத்தியமங்கலம் பகுதியில் உள்ள காடுகளில் உள்ள சந்தன மரங்களை மைசூர் மாநிலத்திற்குக் கடத்திச் சென்றதாக யார் மீதேனும் இந்தாண்டு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

1972 மார்ச் 4]

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திம்பம் போன்ற பகுதிகளில் இப்படிப்பட்ட ஏராளமான திருட்டுகள் நடப்பதாகப் பொது மக்களிடமிருந்து புகார்கள் சொல்லப்படுகின்றன. அங்கே சரியாகப் பாதுகாப்பு அமைக்கப்படவில்லை என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, நல்ல முறையில் பாதுகாப்பை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்தாண்டு ஏதாவது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்குத் தான் இல்லை என்று சொன்னேன். சென்ற ஆண்டு 3 வழக்குகள் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் இருக்கின்றன.

சிங்கோனா தோட்டத் தொழிலாளர்கள்

* 311 வினா **திரு. ஏ. சுப்பிரமணியம்** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான சிங்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளரின் குறைகள் குறித்து, நீலமலை தோட்டத் தொழிலாளர் சங்கத்தினிடமிருந்து 26—1—1971 தேதியிட்ட விண்ணப்பமொன்று அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், வால்பாறையில் அரசாங்கத்திற்குச் சொந்தமாகவிருக்கும் சிங்கோனா பிளாண்டேஷனையும், நீலகிரியிலிருக்கும் பிளாண்டேஷனையும் சேர்ந்த தொழிலாளர்கள் கோரிக்கைகளை வைத்து அது சம்பந்தமாக தொழிலாளர் நல அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தி ஓரளவு முடிவு செய்திருக்கிறார்கள். அது விவரம் அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 26—1—1971-ல் அரசுக்கு வந்ததா என்று கேட்டதற்கு வரவில்லை என்று சொன்னேன். 26—9—1971 இல் சிங்கோனா டைரக்டருக்கு